

ஸ்ரீ குரு பூர்ணிமா!
இதழ் 4
பூஜ்யஸ்ரீ சத்குரு தூளி பாபா



# ஸ்ரீ குரு பூர்ணிமா!

பிரம்ம பிரபஞ்ச விளையாட்டு

## இதழ் 4

# பொருளடக்கம்


1. மனதின் பாடம்-------------------------------------------198

௨. அறிவின் உணர்வு------------------------------------------௨0௨

௩. மனதின் பழக்க வழக்கம் அறிவின் தெளிந்த உணர்வு----௨06

௪. ஆனந்த ஆஸ்ரம அன்பர்கள் தபால்-----------------------௨௨6

5. அன்பர் தபால் ௨-------------------------------------------௨௩6

6. அன்பர் தபால் ௩-------------------------------------------௨51

7. அன்பர் தபால் ௪-------------------------------------------௨59


எல்லாம் நீ!



மனம், அந்தி, இந்தத்தால் உருவாகும்

விஞ்ஞானிகள் டாக்டர்கள் ஓர் வியாதியையும் அதன் கிருமிகளையும் ஓர் நாமமாவைத்து அதற்கு ஓர் நாமாவின் மருந்தை வைத்து அழித்து விட்டோம் என கூறுகின்றனர்.

மனம் சொல்வது:

# மனதின் பாடம்!

(1) பாடம்/படிப்பு/பட்டம்/பதவி/பணம்/ அந்தஸ்து/கௌரவம்/பேர்/புகழ்/ இவைகளோடு **ஓஹோ!** என வாழுவோம். இவைகளில் விதிகளை, சேகரித்துக் கொண்டு, ஜனன மரணத்தில் **ஆஹா!** என வீழுவோம்.

(2) கணவன்/மனைவி/குழந்தைகள்/மற்றும், உறவு/சுற்றம்/நட்புடன்/கொடிகட்டி போக்குவரவு/வாயுநஷ்டம்/கொடுக்கல் வாங்கல்/ இவைகளுடன் **ஜே/ஜே/** என அமோகமாக வாழுவோம். இதனில் புண்ணிய பாவத்தினை, வினை பின்னவிட்டு **சே/சே/** என்று **ஸம்ஸார ஸாகரத்தில்** வீழுவோம்.



199

ஆனால் அதே வியாதி
அதே கிருமிகள்
வேறொரு நாமரூபம்
தாங்கி இம் மனம்
படைத்த மனிதனையே
வேறொரு வியாதியாக
வந்து தாக்கி அழிக்கிறது
அதற்கும் இவர்கள் வேறொரு நாமம் இடுகின்றனர்
ஆனால் இவர்கள் காமப்பூதவன் ஆறாவது அறிவது ஐவர் என அறிகிறது

3 பட்டம் பல பெற்று / பதவிகள் பல பெற்று /
வக்கீல் / டாக்டர் / இஞ்சினியர் / விஞ்ஞானி /
ஆசிரியர் / கலெக்டர் / காவல்துறை அதிகாரி /
**சேவை / சேவை /** என சொல்லிக்கொண்டு
அது **வேஷமாய் /** முடிவுற போட்டி பொறாமையால்
மனம் சின்ன தன்மையாகி **வெறியு /** கர்மாவுக்கு
ஆளாகி ஜனனமரண சாகரத்தில் குதிக்கலாம்

4 வாழ்க்கை சகல வசதிகளுடன் **ஆடம்பரம் /**
ஆடம்பரத்தின் நிலையில் கல்விச்சாலை / மருத்துவ துறை /
தர்மச்சாலை / என பலபல ஏற்படுத்திக் கொண்டு
வியாபாரத்தையும் / விளம்பரத்தையும் / பெருக்கி
உள் உலகம் புகழ வாழ்ந்து **அமைதியை /**
இழந்து / கர்மாவைப் பெருக்கி ஜனனமரண
சாகரத்தில் விழலாம்



மனம்! புத்தி! சித்தம்! என்றால் அதன் பொருள் பழையன கழிதலும் புதியன உருவாக்குவதும் ஆகும்.

அறிவாக! இருந்தால் நாமரூபம் வந்து அடங்கும். பின் மோனாவால்
நாமரூபம் நாசமாகும். ஜீவன் முக்தி உண்டு.

(5) இம்மனதின், முக்கியமான ஓர் செயல் என்ன வென்றால்? பேர்! புகழ்! பட்டம்! பதவி! பணம்! இவற்றின் வாழ்க்கை வசதியை! சுட்டிக்காட்டி — ஞானிகள்! மேலே கூறிய, நிலைகளை, ஸ்பஷ்டமாக காட்டி நான்! இல்லாமல் உன்னால், வாழ முடியாது. உலகமும்! உறவும்! சுற்றமும்! உன்னை மதிக்காது. உன்னை மிதிக்கும்.

பகவான்! பகவான்! என பிதற்றுகின்றாயே? அவன் உனக்கு என்ன உபகாரம் செய்தான்? அவனால் என்ன செய்ய முடியும்? அவன் செயலற்றவன். செயலற்ற என்னுடைய! அன்னையாகிய மாயாவும்! நானும்! இல்லாமல் உனக்கு அளவற்ற செல்வங்களையும்! போகங்களையும்! வாழ்க்கை வசதிகளையும்! பட்டம் பதவிகளையும்!



உ

கண்ணால் காண்பதும்! காதால் கேட்பதும்தான் (உ!)
இந்த நாம ரூப ஜக
ஜீவ உறவு சுற்றம்
இவைகளின் ஸங்கிய
மான இருப்பு ஆகும்
ஸ்ரீபகவானே சூட்சுமமான
அறிவு சூர்யமானவன். ஆகவே அவன்
கண்ணுக்கு தெரிவதில்லை ஆனால்?

# ஓஹோ! ஓஹோ!

என்று
வாழ்க்கையையும்! எவர் தருமடையும்? உங்கும்பனே
ஸ்ரீபகவானே ஓர் பரதேசிப்பயல். அவனால்
ஒன்றும் தர முடியாது! ஒன்றும் செய்ய முடியாது.
அப்படி இயலாதவனை கட்டிக் கொண்டிருக்கின்றீர்களே
என அஹங்கார, ஆதிக்க, அதிகார, வெறியுடன்,
உரத்த குரலுடன்!

# கண்ணுக்கு!

தெரியும் நாம ரூப ஜகம் வேண்டுமா?

" தெரியாத இறைவாழ்க்கை வேண்டுமா?

ஆடம்பரமாக வாழ்ந்தால் உலகப்பிரசித்தி பெறுவாய்.
அமைதியாக வாழ்ந்தால் உன்னை எவர் காண முடியும்?
மனதால் யோசி! புத்தியால் செயல்படு! என உன்
மனம் சாட்சி அழைக்கிறது.



அனைத்து நாமரூபம் தனியும்

202

# உள்!

மறைந்து இயக்கத்தின் ஆதாரமான அவனை உள்ளேதான் உணர முடியுமே தவிர வெளியில் காண முடியாது.

அறிவு சொல்வது

# அறிவின் உணர்வு

(1) எல்லாம் அவன் பொருளாகவும்! அவன் இயக்கமாகவும்! எல்லாம் ஈசன் செயலாகவும்! இருப்பதே சத்தியமாகும் போது உடைமையும் உரிமையும்! பாராட்டுவது மண்! மடமையே எதை உணர்ந்தும் சர்வார்ப்பணமாக! விட்டு விட்டு! போக்குவரவிலும் கொடுக்கல் வாங்கலில் மண்! மயக்கம் இல்லாமல், எல்லாம் நலமே! என உணர்தல் அறிவாகும்.

பொருட்பற்றாமல்!

(2) முன்னறியமுடியும் நிலை! வாழ்க்கையில் பொறுமை! விடச் சொல்லவில்லை உடலில் பணிவு! நாக்கில் இனிமை கனிவு! தேவையும் ஆசையும் வாழ்க்கையில் எளிமை! நிறைத்துக் குறைத்தல்! வெறுக்கச் சொல்லவில்லை



மனக் கண்கள் காணும்.

அறிவுக் கண் உணரும்.

(203)

பாலினுள் உள்ள வெண்மையும்! எள்ளினுள் உள்ள எண்ணெயையும்! எப்படி காண முடியாதோ? எப்படி பயிற்சி முயற்சி எப்படி உணர முடியுமோ? அவ்வாறு பிறவி எப்படி உணர முடியும். ஸ்ரீபகவானின் அவஸ்யம் திவ்ய சக்தியும்.

இவைகளுடன், நாம் அடங்கி!

எவரையும், எதையும், அடக்காமல்!

அமைதியை நாடுவது அறிவாகும்.

(3) இவற்றில் உள்! உள்ள உண்மையும்!

எள் ,, ,, எண்ணெயையும்!

பால் ,, ,, வெண்மையையும்!

எப்படி முயற்சியால் கண்டு கொள்

திரேமோ. அப்படி நம்முள்ளும்! அவரவர்களின் உள்ள, ஸ்ரீபகவானைக் கண்டு, உணர்வது அறிவாகும்.

குறிப்பு:- நாமரூபம்! தோன்றும் வரையில் ஸ்ரீபகவான், தோன்றமாட்டான் தோன்ற முடியாது.

தோன்றியவரை நாமரூபம் மறைந்து மறு!

குணம் ஸ்ரீபகவான் தோன்றுவான்.



204

உன் பள்ளிப் பாடத்தில் எப்படி கருமம் முயற்சியுடன் பாடு பட்டு அறியும் பாடத்தில் வெற்றியும் பெறுவாயே! அதேபோல் ஸத்தியத்தை தீவிரம் சிறு முயற்சி செய்திடும். உன்றால் முடியும். முயற்சி அவசியம் உன்றால் திரு (ஸ்ரீபகவான்) விளையாக்கம். சோர்வு அயர்வு வேண்டாம்.

4 கல்லில் மறைந்த நாயை கண்டால், கல் தெரியாது. அந்த கல் நாயை கல்லாக கண்டால், நாய் தெரியாது. ஏதேனும் **ஒன்று** தான் தெரிய முடியும். தெரிய இயலும். **இரண்டும்!**

**ஏக** காலத்தில், தெரியாது! தெரிய முடியாது தெரிய இயலாது என்பதே ஸத்தியம்.

**பணிவும்! பொறுமையும்!** உன் முயற்சியாகும். தன்னை வெளிப்படுத்தி காட்டிக் கொள்வது, **அவன்!** கருணையாகும். இப்படி அவனை விரும்பி உணர்வது அறிவாகும். பொன் பொருள் போகும்!

5 நாமரூப உடல் உலக உறவை சுட்டிக்காட்டி **ஸத்தியமாய்!** நம்பச் செய்யும் மனதை



மனதின் ஓசை

1 கேள்வி:-

ஏ மனிதா! நான்! உன் மனைவி யாக இருந்து கொண்டு உடலின்பம் தருகிறேன்.

உன் அந்திய காலம் வரை தேவையின் பொருளாகவே இருக்கிறேன்.

சுற்று நிறுத்தி, நீ மனைவனின் மகன்தானே? ஸ்ரீமகவானின் குழந்தைதானே? உன் அம்மையிடம் ஸ்ரீமகவான்! உன்னை விளையாட அனுப்பினேனா? வினா! சேகரிக்க அனுப்பினேனா??

விளையாடியது போதும் ஐயா! அவனுடன் சேர்ந்து நரிதுயில் நித்திரை செய்வோம் வா ஐயா!! எனை அறிந்துரைத்து பழகிப்பழகு!

யத்மாவம் தத்துவத்தி என்ற நிலையில் வித்தியைத்தை புகட்டி கவலை இருமல், பார்ம்பரியும்! கேட் பதிலும்! அதுபற்றி பேசுவதிலும் தங்கவளச்சி! என்னும், இறைவனின் போறு இருப்பது அறிவாளவே



உன் உடலில் **இ** பாதி! இடம் கொண்டவள் நான். என்னை! நீ! எப்படி மறக்க முடியும்? இ நாளை உன் மகளாக இருக்கிறேன்

ஓர் மகன் செய்யும் கடமையாக உனக்கு இறுதிக் கடன் வரை செய்கிறேன்.

**மனதின்!** பழக்க & வழக்கமும்! பேச்சும் & செய்கையும்!

**அறிவின்!** தெளிந்த உணர்வும்!

மனம்:- **நான்** பொன்னும்! மணமும்! அள்ளி அள்ளி தருகிறேன். அவை உன், கண்ணால் காணக் கூடியவையாகும்.

அறிவு:- எம் கண்ணால் காணும் பொன் எல்லாம்! **மண்ணே!** பணம் என்பது, உருண்டு ஓடி ஓடி அலைக்கழிக்கும். அது ஓர் உயிர் கொல்லியாகும். ஆனால் அவன் அருளால், கிடைக்கும் பணம், தேவையும் & ஆசையும்! அனுசரித்து, அளவோடு கிடைக்கும் அது போதும்.

மனம்:- அழகான **பெண்!** இன்பம் பேறும் தருகிறேன். இந்த இன்பத்தை விரும்பாத, எந்த சாதனையாளனும், இல்லவே இல்லை.



நீ எனை எவனை?
மறந்தாலும்
உன் மகனை
நீ எப்படி மறக்க முடியும்?

207

ஓ நான் உன்
படிப்பும் பதவியும்
பணமுமாக இருக்கிறேன்.

அறிவு :— அழியாமை கொடுக்கின்ற பணமே
போன்றது என்பேனாம். சொர்க்கால் இன்பம்
முடிந்தால் துன்பம். சாதனை செய்வதும்,
சோதனையும், வேதனையும், தொடர்ந்து
கருவது என்பம் இன்பமே! ஸ்ரீ பகவான் நாம
ஆனந்தமே! எனக்கு போதும். இன்பம் வேண்டாம்.

மனம் :— நான்! உனக்கு ஊர் உலகம்
புகழ் நிலையில், பட்டமும் & பதவியும்
தருகிறேன்.

அறிவு :— பட்டமும் பதவியும்! மேலே மேலே
உயர உயர பறக்கக் கூடியதே. அது எந்த
வினாடியும், அறுந்து போகலாம். அதனால்
பெருத்த நாசம், உண்டாகும். அமைதி இராது.



நான் 208

இல்லையானால் உன் வாழ்வே இல்லை. என்னை எப்படி நீ மறக்க முடியும்? இம் மூன்று கேள்விகளுக்கும் அறிவு பதில் சொல்கிறது.

① எம்மனைவியாக வந்த நாமரூப தாலம்

மனம்:— கார்! பங்களா! மற்றும் ஆடம்பர போகங்கள் நான் தருகிறேன். நீ ஏன் பரதேசியைப் போல் வாழ வேண்டும்? ஓர் அரசகுமாரியைப் போல் ஆடம்பரமாக வாழலாமே? அடிமைக்கதை! உனக்கு ஏன்?

அறிவு:— கொழுந்தே! யாம் ஓர் பரதேசியே! அதாவது பரத்தையே! தேசமாக வாஸ்தவமாக உடையோம். நீ சொல்லும் ஆடம்பரத்தில் அமைதி இல்லை. எளிமையால் ஆனந்தம் உண்டு. மூடி சார்ந்த மனிதனும், முடிவில் ஓர் பிடி சாம்பல் (மண்ணவர்) அவர் இது சத்தியம். (பிரமாணவர்)




209

புண்ணிய பாவ சம்பந்தம் கொண்டதென்றாலும் அது விதிக்கு உட்பட்டு தன் காரியத்தில் நடக்கிறது. ஆனவ் எம் மனைவியான் தாவத்தின்றும் இருந்து இயங்குபவன் ஏகசூக்ஷ்மமானதே. 2

மனம் :- உறவு, சுற்றம், நட்பு, வகையில் ஜேஜே என்ற போக்கு மாறவும்! பொன்னும், பொருளும், பாத்திர பாண்டமும்! பணமும்! ஒருவருக்கொருவர், கொடுத்து இன்பம் தரும் அனந்தம் தருமவை அவை. கொடுக்கல் வாங்கலினால், ஓஹோ! என வாழலாமே!

அறிவு :- நீரூறும் உறவு, சுற்றம், நட்பு, இவையெல்லாம், வினையை பகிர்ந்து பங்குபோடும் சந்தை! கூட்டமாகும். இக்கூட்டங்களில் சிக்கிக் கொண்டால், முடிவில் பரிதாபம் தான் மிஞ்சும்.





20

அதைப் போல எம் தந்தாவின் மகனுள் இருப்பவனும் ஸ்ரீமகவானே! அந்த நாமரூபத்தில் இருந்து கொண்டு அவன் தெரிய அந்த கர்மாவை முழுமையாக செய்கிறான். இயக்கம் எம் ஸ்ரீமகவானை மகன் வடிவம் இயக்குவது எம் ஸ்ரீமகவான் ஆகும்.

மனம் :- என்ன இப்படி, ஒன்றுக்குமே உதவு வரமாட்டேன் என்கிறாயே? தடையாக ஒன்று சொல்கிறேன் கேள்?

இப்போது உன் உடம்பில், வலு இருக்கிறது.

இன்னும் சிலகாலத்தில், உன் உடம்பில் வலு (பலம்) குறைந்து குறைந்து இல்லாமல் போய்விடும் என்பது உறுதி.

அது சமயம்?

உனக்கு, ஒரு சொம்பு ஜலம்/மோண்டு கொடுக்கக் கூட, ஒரு நாதியும் (ணைமம்|உறவு) எவரும் இருக்க முடியாது. இருக்க விடாமல், விதி சதி செய்யும்! அப்போது நீ என்ன செய்வாய்? யாரை அழைப்பாய்? எவர் உனக்கு உதவ வருவார்? உன் மனைவியும் உன் பிள்ளைகளும் கூட, உன்னைக் கைவிட்டுவிடுவர். இது உறுதி! அதன் காரணம் :-



3 பட்டம்! பதவி!

பணம்! 2!!

இல்லாத இல்லறம்
வாழ்விதிமுறைகள்
அனைத்தும் கிட்ட
மிட்டபடி பாரம்பரிய
தோஷம் இல்லாமல்
ஒழுங்காக அனைத்தும்

நடிப்பாக! நடைபெற்று வருகிறது.

எல்லாம் அவனே! எல்லாம் அவனே! என்று

நேயம் இல்லாதவன்! நம்பியதாலும்

உறவு சுற்றத்தை பந்தம் என நீ விட்டதாலும்

உன்னை கவனிக்க போதிய வசதி இல்லாததாலும்

உன்னிடம் பணப்பசை இல்லாததாலும்

நீள்! உலகை! உறவு!

விட்டு விட்ட தன்மையால்

மேலே கூறியவை உன்னை கைவிட்டுவிடும்

அதுசமயம் உனக்கு உதவுபவர் யார்?
அந்த உன் பிரியமானவர் சங்கு சக்கரத்தோடா?
திரிசூலத்தோடா? கையில் வேலோடா? கையில்
குழலோடா? அங்கு நிற்பான்! எனப்பகவ
கவைகாணதே



இதை கூட்டவோ! குறைக்கவோ! விலக்கவோ! மாற்றவோ! மயக்கவோ! இங்கு உ|உ

**எவர்க்கும்** அதிகாரம் இல்லை.

என்பதே ஸத்தியம்

ஆறவி இறை அனைத்தும் எம் ஸ்ரீபகவானின்

ஒருபயலும் வரமாட்டான். **நான்**

**தான்!** வந்து நிற்க வேண்டும். ஆகவே

**என்னை** நம்பு! உன் ஸ்ரீபகவானை நம்பாதே!

~~நானே உனக்கு என்னை நம்புவானாக~~

அறிவு:- சுருபமாகவே சிரித்துவிட்டு

ஹே ஸங்கல்ப விகல்ப குற்ற கர்மங்கள் மனமே!

புலம்பி முடித்து விட்டாயா? நன்றாக கேள்!

எம் கை கருவியாகிய **மாயா!** இவ்வியாறவ்

உனக்கு இருப்பு ஏது? உனக்கு இயக்கம் ஏது?

உன் நாம ரூப, குற்ற கர்மங்கள் ஏது???

எம் நிழல் மாயா! மாயாவின் மைந்தன் நீ!

எண்ணமும்! அதன் சொல்லும் தானே உன் வடிவம்?

இதை உணர்.



ஓ மாயா! (உ|3)

இறைவ் இறப்பாக நடைபெறுகிறது. அவன் கை பதுமையாக யாம் செயல்படுவதால் ஒன்று அந்த கர்மா புண்ணிய பாவங்கள் நிறைவுற்று முடிவடைகிறது.

எம்! நிலையில் நீ! இல்லாதவனே! இல்லாத நீயே! இப்படி துள்ளுகிறாயே? என்றும் உள்ள எம்! இருப்பை நீ அறியாய்! உன் அறியாமையை கண்டு அனுதாபம் கொள்கிறோம் பரிதாபப்படுகிறோம்.

இதை உணர்.

(A) நாமரூபம்! உன் கற்பனை அது நீ இல்லாத ஒன்றாகும்.

அந்த நிலையில்,

(B) அந்த (ஏகத்துவ நிலையில்) எல்லாம் எம் இருப்பே! எல்லாம் எம் இயக்கமே! எல்லாம் எம் உடைமையே! எமக்கு! அயலாக எந்த நாமரூபமும் இல்லவே இல்லை. நாமரூப பேதம் உன்னுடையது. ஆனால் அனைத்து இருப்பும் எம்முடையது.



காமா 2/4

தொடராத படி எம்முடைய முழுமையான சர்வார்ப்பணமானது அவன் கருணையால் ஆனந்தமாக நடைபெறுவதை யாம் கண்டு ஆனந்தம் அடைகிறோம். ஏ மானமே! சாந்தியும் அமைதியும் பெறுவாயாக.


இனி உன் நிலையில், உன் அசட்டுத்தன கேள்விக்கு, பதில் கேளாய்.

ஜென்மமே! யாம் ஏக! ஒருமையாக இருக்கும் போது, உன் அன்னையாகிய மாயாவை யாம் பற்றிய நிலையில், ஸ்ரீபகவான் என, ஆவோம். அங்கு எம் இருப்பு சாந்தியின் அமைதியான ஆனந்தமே! (ஏக ஒருமையே)

யாமே! உன்னைப் பற்றிப்பட்டது போல் நடித்த! நிலையில் மனித ஜீவனும் ஆனோம்.

உன் கன்னியின், தோற்றமான நாமரூபங்களை, அதாவது மோன் மொருன்! மற்றும் போக்கியமொருன்





மனமே 21

உன் உபகாரமும்!

உன் சினேகமும்!

நாமரூப நுண் தோ
ஷங்கள் கொடுத்து
வினையை பெருக்கும்

ஆகவே நீ தனையே இயங்க
வேண்டாம் எம்முள் மறைந்து விடுவாயாகு
என்றது அறிவு! அங்கு மனது காணோம்.

[illegible]

உறவு சுற்றம் என உடைமை உரிமை!

கொண்டாடியது போல், அதில் வினைகளை

தேற்று விக்கத் தொண்டு **பந்த**

**ஜீவனை** நடிக்கிறோம். அதை

உண்மையென நீ நம்பிக் கொண்டிருக்கிறாய்.

நீ ஒரு வார்த்தை சொன்னாய் யார் :- உன்னை

யார் காப்பாற்றுவார்? ஊர் உலகம் உறவு

சுற்றம், உன்னை கைவிட்டு விடும்! **நான்**

நாமரூபமாக தோற்றுகிறேன் என்றும்.

**எமக்கு** நாமரூபம் இல்லை யென்றும்?

நாமரூபம் இல்லாதவன், எப்படி காப்பாற்றுவான்

என்றும்; நீ ஓர் **அனாதை** ஆகிவிடுவாய்

என்றும் பயமுறுத்தியே!



ஆடம்பரமான
வாழ்க்கையை
விரும்பாமல் 216
அமைதி நிலவுது
எளிமையான வாழ்
வுடன் சாதனை செய்தால்
அமைதியும், ஆனந்தமும்
நீங்களும். ஊர் உலகம் புகழ வாழ
முடியாது. உள்ளதோரு போல் வாழலாம்.

ஜேயமாயமான மனதே! விஷயம்!
சம்பந்த கணக்கை முடிக்கவே
தொடர அல்ல!
உறுதி ஆண்டுள்ளோம். எதுவானாலும்,
நாமரூப சம்பந்தம் கொண்ட

தாவத்தின் நிலை கண்டு

வந்து சேரும்! சென்று விலகும்!!

அதேபோல், உறவு சுற்ற நாமரூபங்களும்,
நீ கண்டு சேர்வர். நீ கண்டு விலகுவர்.
எம் தாவத்தை சேர்பவர்! அதிசயமந்த ஆவர்.
எம்மைவிட்டு விலகுபவர், விதி சம்பந்தம்
முடிந்ததால் விலகுவர். உன் குணமே இன்பதுன்பம்.
ஆகும். எம் இருப்பே ஆனந்தமயம் ஆகும்.



நாமரூப ஜகம் 217

எந்த வழி உன்னை விடுகிறதோ

ஒரு வழியே உன் உபாசனை மூர்த்தியாகிய ஸ்ரீபகவான்

எங்குமாய்! எல்லாமாய்! அனைத்துமாய்! ஏகமாய்! எல்லாம் அவனே என ஆவான். இது சத்தியம்.

அறிவு:- ஏ மனமே! ஸ்ரீபகவான் கண்களை ஏன் கொடுத்தான் தெரியுமா? நாமரூப சொந்த பந்தங்களை காண்பதற்கல்ல. அனைத்து நாமரூப வேஷமிட்டிருக்கும் ஸ்ரீபகவானே **நடிக்கிறான்!** என்ற மெய் உணர்வினால், அவனை தரிசிப்பதற்கே கண்களை கொடுத்தான்.

ஏ மனமே! காதை ஏன் கொடுத்தான் தெரியுமா? எவர் எதைப் பேசினாலும், சற்று பொறுமையுடன்! ஏற்றுக் கொண்டு, அர்த்தத்தை! அனர்த்தம் ஆக்காமல் அதாவது குற்றம் குறையாகவும், பரிகாசமாகவும்! உண்மையில் ஸ்ரீபகவான் வாக்கே இது. என கேட்பதற்கே, பக்தி ஞான வாசகங்களை, ஸ்ரீஅன்பர்கள் வாயிலாக கேட்பதற்கே! காதைக் கொடுத்தான்.

ஏ மனமே! வாயை ஏன் கொடுத்தான் தெரியுமா? அவனைப் போற்றி மகிழ்ந்து, பாடுவதற்குமே குரு நாம ஸ்துதி செய்வதற்குமே நாவை படைத்தான். **புறணி!** பேசவும்! சொந்த பந்த பேச்சுக்குமே உன் நாவை கொடுக்கவில்லை.



உனக்கு உன்
அவயவங்களை
கண்! காது!
வாய்! கை!
கால்கள்!
மொத்தத்தில் உடல்
ஏன் கொடுத்தான் தெரியுமா?

அவன் பணியவும் ஸத்காரியம் செய்யவும்
அவன் அன்பர்களுக்கு பணிவிடை செய்யவும் தான் கொடுத்தான்.

மனமே! தலையை ஏன் கொடுத்தான் தெரியுமா?
ஸ்ரீபகவானையும்! அவன் மெய்யன்பர்களையும்!
வணங்கிப் பணிவதற்கே!
உன் தலையை கொடுத்தானே யன்றி
வெள்ளாடு போல்! தலையை ஆட்டுவதற் கல்ல

வணங்கா முடியனாய்! திமிர்ந்து திரிய
தலையை கொடுக்கவில்லை

மனமே! கைகளை ஏன் கொடுத்தான் தெரியுமா?
புண்ணிய பாவங்களை பண்ணவும்! பண்டப் பொருள்
களை, கொடுக்கல் வாங்கல் செய்யவும்! உன் கைகளை
கொடுக்கவில்லை. அவனையும்! அவன் அன்பர்களையும்
கை கூப்பி வணங்குவதற்கே கைகளை கொடுத்தான்.

மனமே! கால்களை ஏன் கொடுத்தான் தெரியுமா?
ஆலயங்கள்! மற்றும் அவன் வாழும் மலைகள்
(கிரிவலம்) மற்றும் அவன் மெய்யன்பர்களையும்,




பணிவிடை என்று? 219

இ நீ பணி நீ காலி
அதன் விடை
இயல்பாகவே உன்னை
நாடி தேடி வரும் இது
மௌன! மொழி! போதும்
சத்தியம் மாறாக மௌன மொழி கொடுக்கவில்லை இது
தேட உனக்கு உடல் கொடுக்கவில்லை இது சத்தியம்.

ஜீவனம் வரவுமே! உன் கால்
கிழ கொடுத்தாலேயன்றி உணர்மாறு போல்,
உணர்ச்சிகளும், கண்கண்ட இடமெல்லாம்
கண்டபடி சுற்ற உன் கால்களை கொடுக்கவில்லை
மனமே! மெய்க்கிறீர் உன் உடல்
ஏன் கொடுக்கனு தெரியுமா? பரமகவானையும்
அவன் அன்பர்களையும்! மண்டியிட்டோ!
சாஷ்டாங்கமாகவோ! நீடுழைம்
நிமிர்ந்தோம்! விழுந்தோம்!
(நுண்மம் சம்பா திகழ்)
எளிமையே உன் உடல்
கொடுத்தாள்
உணர்! மாறு போல் உணர்ச்சிகளும்! மௌன
மொழி மட்டும் தேடவும் உன் உடல் கொடுக்கவில்லை

220






பொன்/பொருள்/போக
கேட்கும் எல்லாம்
உன் வினை!
வினைப்படி அமைந்த
ஒன்றும். அந்த
கடமை உனக்கில்லை.
அதை அமைச்சமாக அவன் நாமத்தைச்
சொல்லி சொல்லி நகர்த்து தீர்த்துவிடும்.

மனமே! இவைகளை உணர்ந்தாவது, இனி
அடங்கு! எவரையும்! எதையும்!
அடக்காதே!

ஓ மனமே! ஓர் கேள்வி கேட்டாயே! அதை
கற்று உள் ஆழ்ந்து உணர்வாயாக.
கண்ணால் காணமுடியாத, காணக்கூடாத
ஸ்ரீபகவானை/நம்பி மோசம் போகாதே!
என்றும் கண்ணால் காணக்கூடிய நாமமே!
ஜகஜீவாதிமாந்தர், உறவு சுற்றம் பொன்
பொருள்/போக போக்கிய வஸ்துக்களை
நம்பினால் இன்பமாய் வாழ்வாயென்றோ?



ஆனால் அவனே
பணிவதை
விடாதே!
உன் கடமை
அவனைப் பணிவது.

(221)

அவன் திட்டம் உன் விதியின் நிகழ்வு
தொகுத்து எடுத்து உன் மனதை பாதிக்காமல்

இதை உணர்.

நேருக்கு நேர்

(1) உன் கண்ணால்! உன்னால் காண முடியுமா?

அதே போல் உன் உள்! அந்தர்யாமியாக,

இருந்து வழி நடத்தும், அருவாய் மட்டுமே
உணரும், சூட்சும ரூபத்தை ஸ்ரீபகவானையும்
நேருக்கு நேர் காண முடியாது.

ஆனால்?

(2) உன் கண்ணால்! கொண்டுதான், இந்த
நாமரூப, ஜகத், ஜீவ, உருவ அருவம், மண் பொன்
இவைகளை காண்கிறாய். தொகுக்கவும் பார்க்கவும்
செய்கிறாய். அதே போல்?
ஸ்ரீபகவானும் உன்னுள் உருவமாய்! தோன்றுகின்ற
துணைவனாய்! நீ காண முடியாத நிலையில் அமைந்திருக்கும்



உ

காம்பற்ற வேண்டியது அவன் கடமை ஆசை! என்பது நம் ஸ்ரீமஹான்களின் அனுபவமாக்கானம்.

உஉஉ

அதனை விதன்று — தன் கடன் (இறைகடன்) அடியேனையும் தாங்குதல். எம் கடன் (ஜீவகடன்) அவனைப் பணிவதுவென்றார்கள்.

ஸர்வாந்தர்யாமியாய் இருந்து சர்வசாட்சியாய் நடத்துகிறான்.

ஓ ஆவல்?

ஓர் முகம் பார்க்கும் கண்ணாடியின் மூலமாக உன் கண்ணையே காணலாம்.

அதேபோல்?

ஓர் ஸத்குருவின் துணைகொண்டு தான் உன்னுள் உறைந்திருக்கும் ஸ்ரீபகவானையும், எங்கும் பரவி நிறைந்திருக்கும் பரத்தையும் முறையே காணவும் உணரவும் முடியும் இது ஸத்தியம்.




இ ஷ்டம்! நீட்டிமை நிமிர்ந்தோம். வாழ்ந்தோம். ௨௨௩ என்பதே முறையான சர்வார்ப்பணத்தின் சரணாகதி நிலையில் சமர்ப்பித்தவராவோம்.

வேதாந்த கருத்துக்களும்! உபநிஷதமும்!
அனுபவ ஸ்ரீமஹான்களின் வாக்கும்!
என்ன சொல்கிறது என்றால்?

① காண்பவனை இரு!
② காணும்பொருள்! என ஆகாதே
என வக்கியம் பிரமாணமாக சொல்கிறது.
இதன் உண்மை என்னவென்றால்?

① காண்பவனை இரு :- இது அறிவின்! நிலை.
இது ஸ்ரீ பகவான் நிலை. அறிவாக இருந்தால்
ஆன்மாவாகும்! ஸ்ரீபகவானை
இருந்தால் மாயாவை! உடையவனும்.
ஆன்மாவாக இருந்தால், குணத்த நிலையாவோம்.
ஸ்ரீபகவானை இருந்தால், ஏக குணமாவோம்.





கண்களால்
காண்பதும்!
காதுகளால்
கேட்பதும்!
சுத்தப் பொய்!

௨௨௪

ஆகும் அங்கு நம்
அறிவோடு இருந்து கொண்டு
நாம ரூப தோற்றத்தை
சந்தேகப்படாமல்
தர்மிஷ்டர் பண்ணி

ஆன்மாவாக இருந்தால் யாம் இருக்
கிறோம் என்ற ஓர் இருப்பும்! யாம் அதுவாக
இருக்கிறோம் என்ற மண்ணில் (மகேசிப்)
உருவான பாறை! என்ற தோற்றமும் உண்டு.
ஆனால் இயக்கம் இல்லை.
ஆனால் இயக்கம் இல்லை. சர்வசாட்சி நிலைக்கும் பொரு
இது சாட்சி நிலைக்கும்! சர்வசாட்சி நிலைக்கும் பொருந்துவம்

ஆகவே இது காண்பவன் என்ற அந்த நிலையாகும்.

௨ காணும் பொருள் என ஆகாதே- இது நாம
ரூப ஜகஜ்ஜீவ நிலையால் தோற்றம்! இருப்பு!
மாற்றம்! மறைவுடன்! கூடிய மனம்
ஆகும்.
இங்கு தோற்ற குணங்களும் பண்ணிவிடும்.
புண்ணியபாபம் என்ற இரண்டையும் தொடரும்.

## மனதின் பழக்க வழக்கம் அறிவின் தெளிந்த உணர்வு



உ

இருப்பது ஒன்றே!

நடப்பது நலமே!

என சாந்தியின்
சமாதானம் செய்து
சுற்று அமைதியை
காத்தால் எல்லாம்
நலமாகவே மாறிவிடும். நலமாக முடிவுறும்.
இது இவ்வேழையின் அநுபவம்.

ஆகவே ஓ மனமே! நீ மனமாக இருந்து பட்ட
அவஸ்தைகளை யெல்லாம் போதாதா? திரும்ப திரும்ப
கருக்குழி சென்ற காலங்கள் போதாதா? நீ
எத்தனை பேருக்கு மனைவியாயிருந்து இன்பம்
கொடுத்தாய்? நீ எத்தனை பேருக்கு கணவனை
இருந்து கொண்டு இரும்பாரம் சுமந்த காலங்
கள் போதாதா? பெண்! பெண்! பொருள்! போதும்!
என தெருநாய் போல், அந்த காலங்கள் போதாதோ?
இன்னமும் **ஓர் கருக்குழி**! உனக்கு
தேவையா? உன்னை உன்னுள் உணர்ந்து பார்.

**நீயே! யாம்! யாமே! நீ!** நாமரூப

ஜனன மரண, இன்ப துன்பம் இனி வேண்டாம்.
என்றும் நிலைத்த, ஆனந்தம் ஒன்றே போதும்!
என கூறிக் கொண்டே மனதை அறிவு தேடி
பார்த்தது. மனதைக் காணவில்லை. அங்கு மனமே
அறிவாகி விட்டது. இரண்டென்ற இரண்டும்
ஒன்றென்ற ஒன்றும் இல்லையென்ற
உணர்வும் இல்லையென ஆகிவிட்டோம்.

இருப்பது ஒன்றே! நடப்பது நலமே!
எல்லாம் ~~யாமே~~!
யாமே அது அதுவேதான்! இது சத்தியம்.

**பாபா.**



உ

(ஸத்திய வாக்கு) 226

ஸத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைபெறும்!

"ஸ்ரீ ஸத்குரு திருவடி துணை! "நம்பினோர் கெடுவதில்லை!"
"தெய்வம் மனுஷ்யானாம்! "யத் பாவம் தத் பவதி!"
"ஸ்ரீராம், ஜெயராம், ஜெயஜெயராம்" ஓம்!
"அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம், அகமே எல்லாம்!
"ஜெகம், பரமும், ஜீவர்களும், சிறுமை இல்லை!

அன்பில் நிறைந்து! அறிவில் வளர்ந்து!
ஆனந்தம் நிறைந்த ஆனந்தா
ஸ்ரம ஞானக்குழந்தைகளே!

சொல்லாலும்! செயலாலும்! நீங்கள் அனைவரும்
எவரையும்! எதையும்! அடக்காமல்
நீங்கள் உங்கள் வாக்கை அடக்கி!
ஸ்ரீராம் நாமத்தில் உங்களை ஒடுக்கினால் அமைதியான
வாழ்வும்! ஜீவன் முக்தியும்! பெறுவீர்களென வாழ்த்துகிறேன்



கருணை வேண்டும்: 227

இறை உணர்வுடன் கூடிய சர்வார்ப்பண நிலையில் உள்ள

கனிவுடன் அவனை வேண்டி உன் சேவையாகவும் அர்ப்பணிப்பை செய்வாயானால் உனக்கு வேறு இல்லையானால் பிறர் தாமாகவே கொண்டும் அர்ப்பணிப்பை செய்வான்

# சில வைத்திய வாசகங்கள்!

## பரம்பூஜ்ய ஸ்ரீ பப்பா! அருளியவை.

(1) வாக்கில் இனிமை! கனிவு! (2) வாழ்க்கையில் எளிமை!
(3) பார்வையில் கருணை! (4) உடலில் பணிவு!
(5) சாதனையில் நிதானம்! (6) உறவு, சுற்றம், நட்பில்
பாசம்! இல்லாத அன்பு! இவைகளுடன்
ஒட்டு மொத்த எல்லாவற்றிலும் பொறுமை!

இவைகளே, உங்கள் வைத்தியமாகக் கொண்டு, "வாழ்க்கை வாழ்வதற்கே" என இல்லாமல், "சாதனைக்கே" என இருந்தால், அவனியம் இக வாழ்விலும், சுகம் நலம் அடைவீர். உங்கள் சாதனையால் ஆனந்தம் பெற்று, முடிவில் பிறவா நிலையாகிய ஜீவன் முக்தியும்! அடைவீர்கள் என வாழ்த்துகிறேன்.



உனக்கு பிற (௨௨) சம்பந்தம் இல்லையென்றால் உன்னை விலக்கி விடுவான் பிறதாவத்தை வைத்து அதிகாரியம் செய்து முடிப்பான். இங்கு உனக்கு உன்சாதனை விட்டுக்கொடுத்து விலகுவதும் அவன் செயலென ஆனந்தம் அடைவதே சாதனை.

இனி அவைகளின் சுருக்க விளக்கம்!

1 வாக்கில் இனிமையும்! கனிவும்! வேண்டும்.

இனிமை என்றால், **அறகுரு** நம்பிக்கையில் எல்லாம் நீயே! எல்லாம் உன்னுடையது! எல்லாம் உனது! என்ற சர்வார்ப்பண நிலையில். அதில் சந்தேக கலக்கமயம் இல்லாமல். வாக்கு வர வேண்டும்.

கனிவு என்றால், எவரிடமும்! எதனிடமும்! அகங்கார அதிகார ஆதிக்க வெறியுடன், சுடுகின்ற நிலையில், **கடும் சுடும் கட** திண்டாடு வேடிக்கை விளையாட்டு வாக்கு வராமல், குளுமையும்! எளிமையும்! கலந்த வாக்கு வருவதாகும்.

2 வாழ்க்கையில் எளிமை:— எளிமை வேண்டும். வறுமை வேண்டாம். சிக்கனம் வேண்டும். எவருக்கும் கொடுக்க முடியாத, கருமித்தனம் வேண்டாம். உணவு உடை! இருப்பிடம்! மூன்றும் அளவோடு அனுபவிக்கும்



காருண்யம் வேண்டாம். ஒருவருக்கு ஓர் உபகாரம் ௨௨௯ செய்யும் கிரியையில் ஆத்திர, அவசர, ஆதிக்க, அதிகார வெறியுடன் நான் என்னை விடாமல் செய்யும்

**பரோபகாரம்** ஆவேசம் இல வேண்டாம்.

உன்னிடம் இருப்பதிலும்! உனக்கு கிடைப்பதிலும்! இறை கிருபையால், உன் விதியின்படி நடப்பதிலும்! எல்லாம் நலமே! எல்லாம் நலமே! எல்லாம் நலமே! என, **பூரண** நிறைவுடன், இருப்பதே எளிமை.

**ஓ** பார்வையில் கருணை:- மனித ஜீவனோ! அல்லது பிற ஜீவனோ! அவரவர் **வினையால்** தாக்குண்டு, சங்கடம் அடையும் போது அதை நீ காண நேரிட்டால், உன் உபாசனை மூர்த்தியிடம், மனம் உருகி ஓ பிரபோ! உலக ஜீவ ராசிகள் **நீயே!** இங்கு என்ன செய்ய வேண்டுமோ, அதை செய்வாயாக; என உருகி பிரார்த்தனை செய். அதுசமயம்,

குறிப்பு:- உன்னைவிட, அங்கு உபகாரம், செய்யும் பாக்கியம் **பிராப்தம்** இருந்தால் அங்கே **நான் என்னை** நீக்கி, உன்னால் இயன்ற உபகாரம் செய். முந்திரிக் கொட்டையைப் போல் முந்தாதே



மனதால் பணிந்தால் **மனம்** பணிவடையும் உடலால் பணிந்தால் வினைகள் நாசமாகும்.

# மௌனம்!

என்பது 230

வாய் பேசாமல் இருப்பது மௌனம் ஆகாது. 10 வார்த்தை பேசும் இடத்தில் இரண்டொரு வார்த்தை

**பேசுவது** மௌனம் ஆகும். மேலும் தொடரும்.

4 உடலால் **பணிவு**

இது ஒருவரை ஒருவர் **பார்த்து** நமஸ்காரம் செய்வதை குறிக்கும். சாஷ்டாங்க நமஸ்காரமோ, மண்டியிட்டு நமஸ்காரமோ, உடல் வளைந்த நமஸ்காரமோ, கைகுவித்து வணங்கிய நமஸ்காரமோ, அவரவர்

**நீ!** கண்டு செய்ய வேண்டும். அப்படி செய்பவர்கள் அல்லது குருதேவா! என்றோ, உன் உபாசனை தெய்வத்தின் நாமாவுடனோ, நமஸ்காரம் கொடுக்கவும்! நமஸ்காரம் பெறவும்! செய்ய வேண்டும். அப்படி செய்யும் போது, நீ அவரை வணங்கவில்லை. அவர் உன்னை வணங்கவில்லை. ~~உங்களுள் உள்ள~~ நீங்கள் இருவரும், **இறை/குருவை** வணங்குகிறீர்கள். ஆண ஆசியும் பெறுகிறீர்கள்.

உடலால் **நாணல்** புல்லைப் போல் பணிந்தால், உன் வாழ்வில் சோதனை வேதனையின்றி ஆனந்தம் அடைவாய்.



பேச்சில் விட்டுக் கொடுத்து விலகு 23!
வரும் பிரம்மனை நோக்கு

கும்/ கும்

வார்த்தை பேசாதிருத்தலும் மௌனம் ஆகும். மேலும் ஒருவர் உன்னை கடும் வார்த்தையால் பேசித் தாக்கிறதும் ஏற்படும்.

5 சாதனையில் நிதானம் :- சாதனை கடுமையாக செய்பவர்களுக்கே, சோதனையும்! வேதனையும்! அவர்கள் வினைமனம்! அறிந்து அவசியம் வந்தே தீரும்! வந்தே ஆகவேண்டும்! என்பதே நியதி. ~~அம்முறையில் வரும் சோதனை~~ செய்வினை என்றே பொருள் அதை இவனேற்றே ஆகவேண்டும்.

பொன் இருந்தால், புடம் போடமுடியும். புடம் போட வேண்டும். மற்றும் எந்த பொருளையும், புடம் போட முடியாது. புடம் போட இயலாது. அது போல் மோசடி இச்சை உள்ள, மக்களை ஆன்மாவையே, வினைமனம் என்ற களிம்பை நீக்கி சுத்த பொன்னுக்கு புடம் போட்டே ஆகவேண்டும். இங்கு வேதனையும் சகித்தலும், விட்டுக் கொடுத்து விலகுதலும், நிதானமும் அவசியம் வேண்டும். நிதானம் என்றுவே நீ+தானம்! நிதானம் ஆகும்.



அங்கு ஒருவர்
வார்த்தை ௨௩௨

இறைப்பு வார்த்தை

நாம் பேசாமல் நமக்கு
மௌனம் பரிமாற்றம் நடக்கும்
இறை என சந்நிதியாக ஒன்றிடும் மௌனம்
இருந்தது ஆகும்.

அதாவது நீ உன்னையே தானம் செய்ய
வேண்டும். அப்படி உன்னை தானம் செய்வது
என்பது, முழுமையான, சர்வார்ப்பணம்! ஆகும்.
இதுவே நிதானம் ஆகும்.

6 A பாசம் இல்லாத அன்பு வேண்டும் —
பாசம் வேறு! அன்பு வேறு!! என உணர வேண்டும்.
பாசம் :— நாமரூப, சொந்த பந்த, பாசப் பற்று
உறவு, சுற்றம், நட்பாக, பார்ப்பது, பேசுவது,
பழகுவது! கொடுக்கல் வாங்கல்! இவை அனைத்தும்,
**பாசம்** ஆகும்.

B அன்பு :— அம்மா! அப்பா! கணவன்! மனைவி!
குழந்தை! உறவு! சுற்றங்களை, சொந்தபந்த பாச,
**நாமரூபம்!** காணாமல்! பேசாமல்!
பழகாமல் கொடுக்கல் வாங்கல் இல்லாமல் எல்லா



[illegible]

233

பாத நமஸ்காரம் செய்யும் போது ஒருவர் பாதத்தை ஒருவர் பார்க்க முடியும் மற்றும் அங்கங்கள் அவஸ்யம் தொடுகிறது. அப்படி இருவழி மட்டும் தர்ஸனமும்! ஸ்பர்ஸனமும்! ஆதலால் தொடவும்.

தோற்றங்களிலும் ஸ்ரீமகவானே, அவரவர் வேடம் தாங்கி! அவரவர் விதிக்கு ஏற்றவாறு நடிக்கிறான்! என சத்தியமாக உணர்ந்து, எல்லோரும் நல்லவர்களே!

எல்லோரும் நம்மவர்களே! நடப்பதெல்லாம் நலமே! என நாம் அடங்கி! ஸ்ரீமகவானாகவும்! அவன் பொருள் இயக்கமாகவும்! உணர்வு அன்பு! ஆகும்.

B ஒட்டுமொத்தத்தில், பொறுமை வேண்டும்!

பொறுமை:- எதையும் நலமே என ஏற்றல்! சகிப்புத்தன்மை! விட்டுக்கொடுத்தல்! பிறர் குற்றம் குறைகளை மறத்தல்! மன்னித்தல்! எல்லாம் அவன் செயல்! எல்லாம் அவன் பொருள்! என சாந்தியாக ஏற்றல்! இறை ஒரு உணர்வாகவே இருக்கவே, பொறுமையாகும்.



இன, ஜன பேதம்! 234
நாசமாகும். அவ்வி
ஸ்ரீ பகவான் சாயுஜ்யம்
உங்கள் சாதனையை
அனுசரித்து பிரத்திய
க்ஷமானவன் இதை ஸ்திதியம்
ஒரு திருமையால் இந்த ஒற்றுமை பக்தியம்
பெற்றால் ஸ்வய அனுபவமாகும்.

# மௌனம்?

மௌனம் பற்றிய ஓர் விளக்கமாவது?

ஸ்ரீஞானக்! குழந்தையாயும்!
உங்கள் ஸ்வாமி ஜியாயும்! விளங்கிய ஸ்ரீ!
பரமஹம்ஸ ஆனந்தா!

வின், அழகுவாக்கு: மௌனம் என்பது, வாயி பேசாமல் இருப்பது மௌனமாகாது. (பேசாமல்) எழுதிக்காட்டுவதும்!
சைகை செய்வதும்! மௌனம் ஆகாது. மிக மிக
குறையாகவும்! இறை குரு உணர்வாகவும்!
நாம் அடங்கி! மற்றனைத்தையும்
கொண்டும். எதிரியாயும். எதிர் விடக்கூடும்.
அடங்காமல்! இருப்பது மௌனம் ஆகும்.

நீ அடங்கினால் உலகம் உன்னுள் அடங்கும். இது சத்தியம்.

நீ அடங்காவிடில் உலகம் உன்னை அடக்கி அழித்துவிடும். இது உறுதி



மஹான்கள் சந்நிதியில் மௌனம் போடாதே.

உ


உடல், உறவு எண்ணம் இருந்தால் அது **பாசம்** ஆகும்.

எல்லாம் அவனே அவன் பொருளே அவன் இயக்கமே என எண்ணம் இருந்தால் அது **அன்பு** ஆகும்.

மேலும், ஓர் முக்கியம் என்னவென்றால் இறை திருமையால், ஸ்ரீமஹாத்மாக்களின் தரிசிக்கும் பாக்கியம் கிடைக்கும் போது, அங்கு நாம் **மௌனம்** கடைப்பிடிக்கப்பட வேண்டும். அதன் காரணம் — ஸ்ரீமஹாத்மாக்களின் **திரு**வாக்காக வரும் **அமுதங்கள்** நாம் சுவைப்பதற்காகவே அவர்கள் தரிசனத்தை, நமக்கு திருமையுடன் கொடுக்கிறான் ஸ்ரீபகவான். அது சமயம், நம் வாயைப் **பூட்டி**க் கொண்டால், (மௌனம் அனுஷ்டித்தால்) அந்த அமுதை எப்படி உண்ண முடியும்? ஆகவே நீங்கள் இடம் கண்டு மௌனம் அனுஷ்டிக்க வேண்டும் என, சொல்லி முடித்து, எம் நாமக்கு ஆசீர்வாதம் அளித்தார்! என இந்த நினைவு செய்கிறோம் திருஅடி

**பரம்பூஜ்ய ஸ்ரீபப்பாஜியின் பொற்பாதம்!**

எல்லாம் ஒன்றே! அதுவாகும்! அதுநீங்களே!



ஸத்திய வாக்கை 236

ஸத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

ஸத்தியம் பேசினால், தர்மம் நிலைவரும்.

"ஸ்ரீஸத்குரு திருவடி துணை" "நம்பினோர் கெடுவதில்லை"
"தெய்வம் மனுஷ்யரூபம்!" "யத் பாவம் தத் பவதி"
"ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெயராம்" ஓம்!
"அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம், அகமே எல்லாம்"
"ஜெகம், பரமும், ஜீவர்களும், சிறிதும் இல்லை"

**அன்பும்! அறமும்!**
**ஏக்கமும்!** மன **ஊக்கமும்!**
ஸத்குரு வாக்கில் **நம்பிக்கையும்!**
ஏற்றுக் கொள்வதில் **வைராக்கியமும்!**
கொண்ட குழந்தாய்!

பிறரை அடக்காமல், நீ அடங்கி சாதனை செய்து வந்தால் **நலமே!** ஜீவன் முக்தியம் பெறுவாய்.
எனவாழ்த்தி ஆசிவதிக்கிறேன்.



ஒட்டு :- 237

மண்! பொன்! பெண்!

இவைகளின் பாசப் பிணைப்பை நீ

அறியாமல் தன்மயமாஹினால் அணு அணுவாக

அகற்றுவதே ஒட்டு அகற்றுதலாகும்.

குழந்தாய்!

உன் அன்பான தபால் கண்டோம். அதில் சில, கேள்விகளை கண்டோம். அவற்றிற்கு மட்டும், சுருக்கமாக, எமது ஐயன் கிருஷ்ணன் என்னும்! கண்ணன்! பதில் தருகிறான்.

அவனை! பேறு! அதுவரைகிறது.

# எல்லாம் அவனே!!!

(1) உன் கேள்வி:- குடும்ப ஞானி என, குறிப்பிடுவதில், அது யாரை குறிக்கிறது?

பதில் :- கணவன்! மனைவி! குழந்தைகள்! அம்மா! அப்பா! இவர்களோடு, வீண்! சம்பந்தம் கொண்டு, குடும்பம்! தொழில்! உறவு! சொந்த பந்தத்தில், உண்டாகும்!



உறவு:—

238

உறவு, சுற்றம், நட்பு
இவைகளின் போக்கு
வரவு, கொடுக்கல்
வாங்கல் இவைகளை நீ
அறியும் நியதியில் ஒவ்வொன்றாக வேண்டாத
வெறுப்பாக நிறுத்தியவன்,
ஸ்ரீநாமரூபமுள்ள, ஓர் ஸ்ரீபகவானுடைய திருவடியை
முழு **நம்பிக்கையோடு**, பற்றிய நீயில்,
சர்வார்ப்பணம் எல்லாம் நீயே, எல்லாம் உன்னுடையவே,
எல்லாம் உனதே, செய்து தன்மானாபிமானத்தை
அழித்துக் கொண்டானாயின், அவனே பக்தோத்தமன்
என்று ஸ்ரீபாகவதசேஷ்டமன், ஆகுவன்.
அவனுக்கு, அவன், ஆர்வ புண்ணியத்தால், **ஸ்ரீ
ஸத்குரு**, கிடைத்து, அவர் பரிபூரண
கிருபையால், பிரம்மார்ப்பணத்து, பிரக்ஞையுடன்
எல்லாம் ஒன்றே, அதுசிவமே, அயமே ப்ரஹ்மம் அது
சர்வாத்மபாவனையுடன், ஒன்றிக் கொண்டு,
**வாய்** ஞானமில்லாமல், **அனுபவ** ஞானமுடன்
எவன் இருக்கிறானோ, அவனே **குடும்பஞானி**
என்று, ஸ்ரீமஹான்களால் போற்றப்படுகிறார்கள்.



ஸ்ரீ பகவானும் / ஸத்குருவும் !

# இன்றே 239

ஸ்ரீபகவானை இயங்கும் போது வேகமாய விதைக்கு அவனுடைய அணியமாய்த் வைத்து **வினையை** பரிபாகப் படுத்துவார்.

② உன் கேள்வி:— தனிக்க வைப்பான் ! தவிக்க வைப்பான் ! இயலாதன்மையை கொடுப்பான் ! இதை பர ! ஈச ! ஜீவ ! நிலையில் விளக்கம் தேவை?

பதில்:— **இயற்கை !**

இது சாதனை செய்யும், பக்குவ ஆன்மாவுக்கே பொருந்தும். ஏனையோருக்கு பொருந்தாது.

(A) தனிக்க வைப்பான்:— உறவு, சுற்றம், நட்பு, இவைகளிலிருந்தும், பணம், தொழில், போக்குவரவு, கொடுக்கல் வாங்கல், ஆகிய இவைகளிலிருந்து, **வினை** / புண்ணிய பாபம் அனுசரித்து, **ஒட்டுறவு** களை துண்டிப்பான்.

(3) தவிக்க வைப்பான்:— மேலே கூறியவைகள், படிப்படியாக விலகும் போது, பழக்க & வழக்க பேச்சு & செய்கை **தோஷ** மானது ! கலையால் தாக்கிப் போட்டு



உறவு சுற்றம் போக்கு வரவு துன்பக் கஷ்டம் போது தரும் மனவேதனை உண்டாகும்.

ஸத்குருவாக உ+0
இயங்கும் போது
எவரும் அறியா
நிலையில் யோகமாயா
வின் துணை கொண்டு
**மனதிற்கு**
பாடம் நடத்தி மனதை மெருகாக்குவார்.

**மீன்** போல், துடி துடித்து பிராண அவஸ்தையும்,
ஆணவ பிராணன் போகாத நிலையில், அப்போதைக்
கப்போது, ஸ்ரீபகவத் கருணை பிரவாகம் என்னும்
**அமுதம்** கிடைத்துக் கொண்டே
இருக்கும். இங்கு உன் மனம், இதை உணர
முடியாது. காரணம் - பழக்க வழக்கமே!
இங்கு **மனம் அறிவாக** படிப்
படியாக மாறி வரும்.

உ இயலாத் தன்மையை கொடுப்பான்:-
இது உன் **தாய்** பிணைப்பில் சிக்கியிருக்கும்
உன் **மனதிற்கு** நடைபெறும் கடைசி
பாடமாகும். இது **நான்** என்ற உடைமையின்
நிலையும், **எனது** என்ற, ஆதிக்க, அதிகார
வெறியான ஆட்டபாட்டமும்,



இ

இந்த வேஷமிட்டு இது+!

அந்த காரியம் செய்ய

மாட்டார். செய்ய

முடியாது. செய்ய கூடாது.

அந்த வேஷமிட்டு இந்த

காரியம் செய்யமாட்டார்! முடியாது! கூடாது!

நான்! என்ற ஆணவமும்! ஒவ்வொரு

காட்சியிலும்! நிகழ்ச்சியிலும்! வாக்கிலும்!

அடிபட்டு! அடிபட்டு! இறந்தே! போகும்.

இது உணவு! உடை! இருப்பிடம்! ஆகிய இம்

மூன்றையும், குறியாகவே இதுவும் உன்

வினையை! அனுசரித்தே இப்பாடம் நடை பெறும்.

இங்கு மனம்! அறவாகிவிடும்!

இங்கு மனம், ஒன்றும் செய்ய முடியாத நிலையில்,

அவா! தன்மையை பெற்று, முழுமையான

சர்வார்ப்பணம்! பரிபூரணமாகவே.

இந்நிலை பெற்ற ஓர் சாதகனுக்கு, பரமக வாசனையன்

எங்குமாய்! ஏகமாய்! எல்லாமாய்! பிரகாசிப்பான்

என அனுபவ இன்ப ஞானிகள் அறுதியாக அறிகிறேன்.



ஜீவகர்த்தத்துவத்தை அழிக்க யோக உ+உ மாயாவும்! ஈசகர்த்தத்துவத்தை அழிக்க யோகமாயவும் பயன்படுகிறது. இவைகளே அனுபவ வாக்கியப்படி

**முறையோடு!** செய்தால்தான்:

**ஈசன்!**

முன் கூறிய மூன்றையும்; ஓர் மகிமை ஆன்மா!

**அறிவு!** சொரூபமாக, ஸ்ரீபகவத் சாக்ஷாத்கார நாடு!

ஸ்ரீபகவானை நாம் என்று, வாழ்வில் ஸ்டாத்தைத் தவ்வி பெற்று வருகிறேன்.

முன் சொன்னது **மனை, ஜீவ** நிலையாகும்.

இனி சொல்வது **ஈச, குரு** நிலையாகும்.

இங்கு ஸ்ரீபகவானும்! ஸத்குருவும்! **ஒன்றே!**

என்ற உள் உணர்வே முக்கியமாகும்.

(A) தனிக்க வைப்பான்:- இங்கு ஓர் சாதகனுக்கு பூர்வ புண்ணியமானது **நீமைக!** மாறி இருந்தால் மட்டுமே, இது பொருந்தும்.



இறை குரு!

கருணையும் ௨+3

இணைந்து செயல்பட

முடியும். தர்மம்

இவ்வாறு பரத்திற்கு

இதுவே பரதர்மம்! எனப் பேசப்படுகிறது உண்மையல்ல.

இவன் பிராப்தத்தின்படி, வேத வேதாந்த,

பலபல நூல்களை! ஆராய்ந்து அறிவான்.

ஆதலால் இவன் மனம்! நிலை கொள்ளாது

புண்ணியமானது நிமிர்ந்து நிற்கும்.

ஆனாலும், அடி ஆழ உள்ளத்தில், பூவு! வாசனையால்

(இப்போ இவன் ~~படித்த சாஸ்திர வாச~~னையாகும்)

அந்த வாசனை கெடாமல் இருக்கும். இருந்தாலும்,

இவன் கற்ற, சாஸ்திர வாசனை திருமலமாக இருக்கும்.

அச்சாஸ்திர வாசனையால், இவன் பெற்ற

பட்டம்! பதவி! பணம்! புகழ்! அந்தஸ்து!

இவை ஒவ்வொன்றாக, பிடுங்கி எறியப்படும்.

ஆதலால் மனம்! உடைந்து போவான்.

இது அவனுக்கு, ஆதரவு! அற்ற நிலையாகும்.

இதுவே இவன் தனித்த நிலையாகும்.



மனசம்பந்தம் கொண்ட 2++ மனித ஜீவனுக்கு மட்டும் மனோ அவஸ்தை இருப்பதால் இவனுக்கு மட்டும் இதுவ் சாரிய மூன்றாகும் மனோபாகம்பு உண்டு. ஏனைய அஜீவத்து ஜீவர்களுக்கும் அறிவோ குறை இருப்பதால் இந்த மனோ அவஸ்தை இல்லை.

B தவிக்க வைப்பான் :- கற்ற வித்தை! காலத்தில் உதவாது! இது படிப்பறிவு என்ற, பாபி! ஞானம் ஆகும். உள் ஆழ்ந்த கல்வியான், அனுபவ! ஞானமிவை.

இவன் விதியை, காரணமாக வைத்து, உடலாலும், உள்ளத்தாலும், பலபல சூழ்நிலைகளிலும்,

சோதனையும் வேதனையும்!

சேர்ந்து கசக்கிப் பிழியும். இங்கு இவனுடைய ஸ்ரீ உபாசனா மூர்த்தியே! (ஸ்ரீபகவானே) ஓர் ஸத்குருவை காட்டுவார். அல்லது ஸத்குருவாய் வருவார்.

ஸத்குரு வருமுன், இவனுக்கு ஏற்படும் சோதனையும்! வேதனையும்! அளவற்ற மனோ துக்கத்தை கொடுக்கும் போது,



ஓர் இல்லற ஞானி
எப்படி இருப்பான்
என்றால்? ௨+5
எந் தொழில் செய்
தாலும், எந்த
அவஸ்தைப்பட்டாலும்
அவன் மனம் எந்த வி
ஷயம் எல்லாம் அவனே!
எல்லாம் அவனே என்ற நினைவோடு இருக்கும்.

இவனது, ஏக்க, உருக்கத்தினால்!
இவன் இஷ்ட நாமமே, இவன் தவிக்கும் நியமமே.
இயலாத் தன்மையை கொடுப்பான்!

நாமரூப! ஜக ஜீவ, தோற்றத்தில், மயங்கி
ஏங்குவது மனம்! ஆகும்.
ரூபகளைத்! சொரூப பிரேமையை இனி
போதும்! என்ற ஏக்கத்துடன் நினைவு செய்வது, அறிவு!
ஆகும்.

நாமரூப, ஜக ஜீவ, அனைத்து தோற்றங்களும்,
மறைகிய (பிரமாகிய) யாமே!
மேலே கூறிய வைகளை முத்தொழில் நியமித்தமாக இருந்து
விளையாடும் நீ! காத்தாக்கும் யாமே!!



குடும்ப ஞானி தனதாக பாவனை செய்யான் ஸ்ரீ பகவானுடைமையாக பாவனை செய்வான்.

குடும்ப ஞானிக்கு உ+6

எல்லாம்

கணவன், மனைவி, குழந்தை, அம்மா அப்பா, உறவு, சுற்றம், நட்பு, பிறவித் தொடர்புடன் உண்டு!

இவ்விரண்டையும் முறையோடு, அனுபவத்தில் உணர்த்தும் **பேராண்மை**! வேண்டி, ஓங்கி தவித்து, அறிவின் தாகத்தோடு, **ஸ்ரீ ஸத்குருவின்**! சந்நிதியில், இருக்கும் நிலையே, அவனுடைய இயலாத்தன்மையால், இங்கு ஸ்ரீ ஸத்குரு அருளும் **தத்த்வம் அஸி அதுவாகவே நீ இருக்கிறாய்** என்ற மஹா வாக்கியமே, அவன் தனிமையையும் அவன் இயலாமையையும்! நாசம் செய்து, **ஞானம்**! ஏகமாய்! எங்குமாய்! எவையுமாய்! **எல்லாமாய்**! இருக்கும் நிலை ஸ்வயமாய் பெற்று, தனிமை, தவிப்பு, இயலாமை, அற்றவனாய், தானாக இருக்கிறேன் என்று, ஸ்ரீ ஞானிகள் சொல்லுகிறார்கள்




ஆணவ உடைமை! (உ+7)
உரிமை! ஆதிக்கம்!
அதிகாரம்! அஹங்காரம்
மான ஈனம்! சூடு சுரணை
லஜ்ஜை! வெட்கம்!
அனைத்து உணர்ச்சிகளும்!
நாசமாயிருக்கும்.

# உ அழுந்து பாருங்கள்!

இங்கு மனதின், புண்ணிய பாபமும் இல்லை.
" அறிவின், ஸத்திய தர்மமும் ".
ஆகவே, (மன) குணங்களின், தன்மையான தனித்தல்
தவித்தல்! இயலாமை! என்ற, விகார, விவகாரம்,
இவ்வகையே இல்லை. இங்கு தன்மை உண்டு!
என்றோ, இல்லை! என்றோ, சொல்வாரும் இல்லை.
அதை ஏற்றுக் கொள்வாரும் இல்லை.

(3) உன் கேள்வி :- யோகமாயா!
போகமாயா! விஷ்ணுமாயா! இவை
மூன்றும், மனதின் ஓர் நிலையா?
மனம் இல்லா நிலையா??




இதன் காரணம்? 248
ஏன் நாம ரூபமுள்ள
ஸ்ரீபகவானிடம் முழு
சர்வாரம்பணம்
ஆகிவிட்டதால் இவன்
இருப்பு இல்லை. அவன்
இருப்பு மட்டுமே உண்டு. அதுவே
இல்லாத ஞானியாவான்.

பதில்:- இது மெய்யுள்ள கேள்வியே!
கவனம் தேவை!

(A) யோகமாயா:- பேரியலின்!
ஒன்று மட்ட இயக்கம். இங்கு நாமா!
மட்டும் உண்டு! ரூபம்! இல்லை!

உதாரணம்:- பாறை என்றால் நாமா மட்டும்.
சிலை என்றால் நாமரூபம். இரும்பு என்றால்
நாமா மட்டும். ஆயுதம் என்றால் நாமரூபம்.
பொன் என்றால் நாமா மட்டும். ஆபரணம்
என்றால் நாமரூபம். களிமண் என்றால் நாமா
மட்டும். பாண்டம் என்றால் நாமரூபம்.
பஞ்சு என்றால் நாமா மட்டும். வஸ்திரம்
என்றால் நாமரூபம். இப்படி அனேகம் உண்டு.



ஸ்ரீ பகவான் நிலையில் (உ+9)
ஸ்ரீ பகவானை யன்றி
யோகமாயாவை நான்
பயன்படுத்திக் கொள்கிறேன்
ஸத்குரு நிலையிலும்
யோகமாயாவானது
இவர் நிலைகண்டு
நாமே செயல்பலம் அபார ஆற்றல் உடையதாகும்.

நாமா என்றால், ஓர் தோற்றம் மட்டும் உண்டு.
நாமரூபம் என்றால், தோற்றம், இயக்கம்,
அதன் குணம் ஆகிய இம்மூன்றும் உண்டு.
ஆகவே யோகமாயாவின் சம்பந்தமானது,
ஓர் தோற்றம் அதன் நாமா
மட்டும் உண்டு என அறியலாக. இங்கு மனம் இல்லை யென்பதே உண்மை.

(B) யோகமாயா:- இது, அறிவின் இரண்டுபட்ட, அமைதியான இயக்கம் ஆகும்
இங்கும் சூட்சும நாமரூபம் உண்டு. ஆனால் விகார தோற்றமும், விவகார பிரச்சினையும் இல்லை யென்பதே உண்மை. இது ஏக குணமாகிய ஸத்வத்தோடு கூடிய தாகும். இங்கு மனம் இல்லையென்பதே உண்மையாகும்.



விஷ்ணு மாயாவின் வேலி நாமரூபங்கள் வைத்து மனதோடு குழைத்தை உருப்பண்ணி மாயாருவ நாகும்.

ஒன்றும் இல்லாமல் **சும்மா** (உ50) இருந்தது / மண்ணை. அம்மண்ணை பானை ஆனது. அப்பானை தம் நிழலாகிய யோகமாயாவினால் நாமரூபம் தாங்கியது.

விஷ்ணுமாயா :- இது **மன** சம்பந்தம் கொண்டதாகும். ஆக ஜீவ **நாமரூப**ங்களுக்கு, அழகு! வசீகரம்! கவர்ச்சி! இவைகளுக்கு ஆதாரமாகவும்! ஆதரவாகவும்! இருக்கக் கூடியதாகும். இதுவே **மனதை மயக்க**! போதை என்று ஸ்ரீ மகான்கள் சொல்வர்.

மனதை மயக்க போ... பாம்; விஷ்ணுமாயாவின் காரியமாகும்.

எல்லாம் ஒன்றே! அது சிவமே! சு... **பாபா.**

அது யாவே! அவ்வே! இது சங்கல்பம்.



# உ

(ஸத்ய வாக்கு)

ஸத்தியம் பேசு

தர்மம் செய்

நாவை அடக்கு

கருணையோடு இரு

"ஸத்தியம் பேசினால் தர்மம் நிலைபெறும்!"

"ஸ்ரீ ஸத் குரு திருவடி துணை! தெய்வம் மனுஷ்யரூபம்!"

"நம்பினோர் கெடுவதில்லை! யத் பாவம் தத் பவதி!"

"ஸ்ரீ ராம், ஜெயராம், ஜெய ஜெய ராம், ஓம்!"

"அகம் பிரம்மம், ஜகம் பிரம்மம், அகமே எல்லாம்!"

"ஜகம், பரமும், ஜீவர்களும் அறிவும் இல்லை!"

**அன்பும்! அறிவும்! பணிவும்! நம்பிக்கையும்!** கொண்டிருந்தால்!

சொல்வாலும்! செயலாலும்!

**அடங்கி!** வாழ்ந்து சாதனை செய்து பிறரை **அடக்காமல்!** கண்டு கொள்ளாமலும், கண்டிக்காமலும் இருந்தால் **அவன்!** உன்னை கண்காணிப்பான்! அதனால் ஜீவன் முக்தியும் பெறலாம் என வாழ்த்தி, ஆசி வழங்கிடும் பிரேமை



அம்மா! நீ கோவை ஒரு சென்று திரும்பு கையில், அன்பின் குடிலுக்கு, செல்வ குழுவில் இயே என்று இரக்கம்/ உருக்கம்! இருந்ததை, யாம் அறிவோம். தொடரும்.

அம்மா! உன் அன்பான தபால் கண்டோம். ஆனந்தம் கொண்டோம். நீ முக்கிய காரணத்தை வைத்து, உன்னை அன்பின் குடிலுக்கு வரவொட்டாமல் தடை செய்து, ஆனால், அவன் நிலையில் கண்ணபுர! பிரசாதம் மட்டும், கிடைக்க, கிருபை செய்துவிட்டான், எம் ஐயன் ஆகிய, திருடன் கண்ணன்! உன் தபாலில் இரண்டு கேள்விகள் தோன்றுகிறது. அதன் விளக்கம் அவன் அருளால்/ அவன் கைபேனா! வரைகிறது. தக்கதாய் உணர்க.

(1) உன் கேள்வி:— பிரம்மரகசியம்! தேவரகசியம்! இவ்விரண்டிற்கும், உள்ள வித்தியாசம் என்ன? ஒற்றுமை வேற்றுமை என்ன?

இறை கிருபை என்பது, குரு கிருபை என்பது, வேற்றுமையாகும்.



யாமாகிய, எம் உ௫௩

கண்ணன்

அந்தர்யாமி ஜெயவாஸா! உன்

ஏக்கமும் உருக்கமும்!

உணர்ந்தே ஆனந்த ஆஸ்ரம ஜோதிதனை, அன்பு ஸாந்தி! என்ற பதுமைகிறு!

தொடரும்

ஒர் ஏழையின் பதிவு:- தேவ ரகஸ்யம்:-

இது ஸ்ரீபகவானுக்கும், அத்யந்த பக்தனுக்கும், உள்ள விசேஷமான சம்பந்தம் கொண்ட ரகஸ்யமாகும். அந்த பக்தனைவன், சர்வார்ப்பணமாக, தன்னை, முழுமையாக அர்ப்பணம் செய்து கொண்டானையின், ஸ்ரீபகவானின் மாயாவை தன்மையை உணர முடியும். இவ்வு ஸ்ரீபகவானின் மாயா! ஒரு செல்லாக் காசாகி விடும். இவ் ரகஸ்யம்! என சொல்லப்படுவது, எது வென்றால்! இப்பக்தன் பத முக்தியை! அடையப் போகிறானா? அல்லது, பர முக்தியை (ஜீவன் முக்தியை) அடையப் போகிறானா, என்பது ரகஸ்யமாக பாது காக்கப்படும்.



உங்களுக்காகவே ஓம்
பயணம் பண்ணி
நான் சந்திக்கும்
வாய்ப்பும் பிரசாத
பரிமாற்றமும்
செய்தது!
உன்னுடைய குறையையும் நீ அறியா வண்ணம்
நீக்கி விட்டான் கொடுமை

ஸ்ரீ பகவத் சொரூப பிரேமையிலேயே,
இவன் மயங்கி விடாததில், அவசியம்
இவனுக்கு பதவிக்கிலே ரகசியமானதும் மற்றும்
அவனுடைய விதிகளைக் வைத்து, நடப்பதை
ரகசியமாக சொல்வது தேவ ரகசியமாகிறது.

பிரம்ம ரகசியம்:- இது குருசிஷ்ய
நிலையாகும். இங்கு அந்த வைசிஷ்யன் ஜீவன்
முக்தி பெறுவானா? பெறமாட்டானா? என்பது
அதிரகசியமாக பாதுகாக்கப்படும்.
இங்கிருந்து உலகம் சிஷ்யனுடைய பாஸ்புக்
வரவு செலவு மிச்சம் இருப்பு
இவற்றின் ரகசியங்கள் குருதேவர் வசமே இருக்கும்.



இது திட்டம் 256 போட்ட காரியம் ஆகும். இவ்வேளை ரகசிய உருக்கத்தியல் விளையும்! இயல்பாக முடிக்கச் செய்கிறார். இது சக்தி ரகசியமாக நடைபெறுவதால் இதை தேவ ரகசியம் என்றும் சொல்லலாம் முடிந்தது.

அதுவே பிரம்ம! ரகசியம் ஆகும். இவ்விரு அரியானிபுத்தின், தெளிவை எப்படி உணர்வது என்றால்?

சுயசோதனையே! தெளிநிலையாகும்.

சுயசோதனை என்பது:— கலிதோஷ! கோர! குணங்கள்! எந்த அளவுக்கு குறைந்து காணப்படுகிறதோ! அந்த அளவுக்கு, நீ முன்னேறி ஜீவன் முக்தியை! நோக்கி செல்கிறாய் என உணர்.

நாம் ஜீவன்முக்தியை பெற்று விடுவோம்.
பெற்று விட்டோம்

என்ற உணர்வே உன் பரமாத்மாவை நீ நேரில் பார்க்கும் நிலையாகும்.

இதுவே பிரம்ம ரகசியம் ஆகும்.



இதை சக்தி என்றோ
② அன்புக் கடவுள் என்றோ
அடுத்தெந்த
இயக்கம் என்றோ

குறியாக சொல்வது 256 என்றால் - உன் ஸ்ரீ கணக்கு ஸ்ரீமகமானுடையது. அதை அவன் மாயா தேவரகசியமாக

பாதுகைத்தவரும் சாணக்கியில் அந்தரகசியம்
உன் பாசத்தூண காவக்கிரமத்தில் புலமையுமே.

உன் கேள்வி:— பக்த சரித்திரங்களைப் படிக்கும் போது, பெண் பக்தர்களை விட, ஆண் பக்தர்களே! அதிகம் தெரிகிறது. இதில் ஏதேனும் குறைகள் உண்டா?

ஒர் மெய்த்தியத்தின் பதில்:— **ஆண்** தாவம் **சத்திய தாமத்தோடு!** கூடிய ஒன்றாகும்! என்றும்; **பெண்** தாவம் என்றால் **புண்ணிய பாவத்தோடு!** கூடிய ஒன்றாகும்! என்றும்; **ஆதி** ஸ்ரீமஹான் காரணம் கூறுகிறது. இதன் உட்கருத்து என்னவென்றால்:— **ஆண்** தாவம் சாதனைக்கு உரியது என்றும்; **பெண்** தாவம் அந்த ஆண்களுக்கு **சேவை** செய்யும் ஒன்றாகும் என்றும்; சொல்லப்படுகிறது.



இவற்றை சக்தி அடக்குவதால் ஆனந்தம் இல்லை. பய துக்கம் சச்சரவும் உண்டு.

உன் மனக் குரங்குக்கு,

உன் ஸ்ரீ குருதேவர், உடையதாகும். அது யோகமான மாதுகளது வரும். அதுரகஸ்யமாக மாதுகாக்கும் பலம். இதுவே பிரம்மரகஸ்யம். இதை மௌனமாகவே இவ்வு உன் பிரம்மார்ப்பணம் அனுபவியும்.

ஆண்கள் / சாதனை / கடுமையாக செய்தால்தான் **பக்தியோ & முக்தியோ** / பெறமுடியும் / என்றும், அந்த ஆண்களுக்கு, பெண்கள் **சேவை** / செய்தால்மட்டும் போதும் / அந்த ஆண்கள் பெறும் **பலன்** / அடையலாம் என்ற கருத்து இருப்பதால், பக்தனை? ஞானியோ? ஆண்கள் தான் பிரபல்யம் ஆகிறார்கள் என உணர்க.

அந்த **ஆண்களுக்கு / பெண் அடங்குவதால் /** பெண்கள் பிரபல்யம் ஆகவில்லை என உணர்க.

இருப்பதுதான் நடப்பது நல்லதே **பாபா.**

அது யாவுமே! அதுவே!



ஒருசில [illegible] பெண்களுக்கு; பூர்வ ஸத்திய தர்மத்தால், ஸத்குரு தர்சனையும்! சேவையும்! பாக்கிய சிறந்த சேவையும் பெற முடியும். அவர்களும் அவசியம் ஜீவன் முக்தி பெற முடியும்.

ஓர் ஜீவன், ஸத்திய தர்மத்தோடு கூடி இருந்தால் ஆண்! தாவம் பெற முடியும். அதுவே விதிக்கு நியதி.

ஓர் ஜீவன், புண்ணிய பாபத்தோடு கூடி இருந்தால் பெண்! தாவம், பெற முடியும். அதுவே விதிக்கு நியதி.

ஸத்திய தர்மம், சாதனையாளனின் நீங்காது, பக்தியை! உயர் நிலைக்கும் இட்டுச்செல்லும்.

புண்ணியபாபம், சாதனையாளனின் நீங்காது! உயர் பிறவியும்! தாழ் பிறவியும்! கூட்டி வைக்கும்.

ஆண்! ஸத்குரு கிடைத்தால், ஜீவன் முக்தி பெற வாய்ப்பு உண்டு.

பெண்! அந்த ஆணுக்கு, சேவை செய்தால் போதும். ஜீவன் முக்தி பெற வாய்ப்பு உண்டு.

பாபா.



சத்திய வாக்கை

சத்தியம் பேசு.
தர்மம் செய்.
நாவை அடக்கு.
கருணையோடு இரு.

"சத்தியம் பேசினால் தர்மம் நிலைபெறும்"!

"ஸ்ரீஸத் குரு திருவடி துணை"! "நம்பினோர் கெடுவதில்லை"!
"தெய்வம் மனுஷ்யரூபம்"! "யத் பாவம் தத் பவதி"!
"ஸ்ரீராம், ஜெயராம், ஜெய ஜெயராம்" ஓம்!

"அகம் பிரம்மம், ஜெகம் பிரம்மம், அகமே எல்லாம்"!
"ஜெகம், பரமும், ஜீவர்களும் இறைவன் இல்லை"!

**அன்பும்! அறிவும்!** நிறைந்த **குழந்தை!** உன்னை குருவாய், எம் தந்தையாக பாவனை செய்து உன் திருவடியில் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து, உன் திருவடித் **தாமரை!** எம் சிரம் மீது தாங்கிக் கொண்டு, பின் பௌவியமாய் எழுந்து, உன்னை எம் அன்புக் குழந்தையாக்கி, ஆரத் தழுவி



உருப்படுவாய் என்றோ நீ உருப்பட்டு போவாய் என்றோ

நாமரூப ௨60 ஜக ஜீவ தோற்றமாய் பிறந்து இறந்து ஜனனமரண சாகரத்தில் உழல்வாய் என்ற ஆசி வசனம் ஆகும்.

உச்சி மோந்து, முத்தமிட்டு உன் நிலை கண்டு; சர்வஞானபீட சித்தராகு/ என வாழ்த்தி, ஆசி வழங்குகிறோம்.

ஓம் ஐயனே!

உன் அன்பான தபால் கண்டோம். அதன் சாராம்சங்களை, கிரஹித்துக் கொண்டோம். அதில் உன், ஒட்டு மொத்த கருத்து யாதெனில்?

(A) நீ ஓர் மருத்துவ கல்லூரியில், ஓர் 500 மாணவர்களுக்கு மேல், பயிற்சி ஆசிரியராக, நீ பணிபுரிவதாக, தெரிகிறது.

(B) யாம் பெற்ற இன்பம் இவ்வையகம் பெறவேண்டும்!



நீ உருப்படமாட்டாய்

இ நாமரூப உலகில் ஆக ஜீவ தோற்றம் அழிந்து நாசமான நிலையில் பிறவா நிலை பெறுவாய் என்ற ஆசிர்வசனம் ஆகும்.

என்ற கருத்தில் தன்னலமற்ற! நிலையில், சேவை செய்ய எண்ணுகிறாய் போலும்?

(யாம்) இ நான்! மட்டும் பலன் அடைந்தால், அது சுயநலம்! ஆகும் என கருதுகிறாய் போலும்!

இப்படி மூன்று நிலைகளில், விளக்கம் கேட்பதாக உணர்கிறேன்.

குறிப்பு:- உன் வாசகங்களில், பெரும்பாலும், நான்! என்ற அஹங்கார, அதிகார, ஆதிக்க, வார்த்தையை காணேம். அதற்கு மாறாக யாம்&நாம்! என்ற வார்த்தை காணப்படுகிறது. அப்படியானால் உன் நிலையில், நீ உருப்படமாட்டாய்! அதாவது நாமரூபம் பெறமாட்டாய் என கருதுகிறேன்.



அன்பர்களுக்கு பணி செய்தால் கர்மா தொலையும், சாமான்யர்களுக்கு பணி செய்தால் கர்மா பெருகும்.

ஆத்மஞானிகள் இறை உறை அன்பர்களுக்குத்தான் பணி! செய் என்றார்கள். பாமரர் கருத்து செய்யென சொல்ல விரும்பிட அப்பாமரர்களுக்கென்றே செல்வந்தர்களையும்! அரசையும்! நிர்மாணம் செய்தான்.

அதாவது, ஜீவன் முக்தி! பெற தகுதி உடையவன், எனத் தேர்ந்து கிறது. இனி உன் சந்தேகத்தின் பதில் உணர்க.

பரோபகாரம் என்ற நிலையில், மக்கள் தொண்டே மகேசன் தொண்டு! என்ற கலியுக! தோஷகுண வாஸனையை, நீக்க வேண்டுமோ????? அல்லது? அன்பர் பணிக்கு எம்மை ஆளாக்கிவிட்டு விட்டால், ஆனந்தம்! தானே வந்தெய்தும் பராபரமே! என்ற பக்தியே! வாக்கை ஏற்றல்??? பிறவாநிலை! பெறவாம். இது சத்தியம். இதுவா??? அதுவா??? புரிகிறதா?



உன் பணி 263

அன்பர்களுக்கே

# சேவை

எப்பலனும் கருதாது செய்கையும் அதனால் பதமுக்தியோ பரமுக்தியோ அடையலாம் என சொன்னார்கள்.

மேலும், ஸ்ரீமஹான்களின் பக்தியை வாக்குப்படி :

# சுயநலம் என்றும் ஸ்வயநலம்!

திருவாசகங்களை, உபயோகிப்பார்கள். இதில் சுயநலம் என்பது, தோஷமான கருவித்தனம்!

என்ற **தனக்காக** நான் தோன்றித்தனம் வாழ்பவன் என பொருள்படும்.

ஸ்வயநலம் என்பது, தூய்தவன சக்தியோடு

இறை & குரு **உணர்வோடு!**

தம்மிடமே தாம் கவனமாக இருக்கும் நிலையாகும்.

அன்பர்கள் சேவை கர்மா அழிப்பதாகும்.

மக்கள் சேவை கர்மா பெருக்கமாகும்.



உன் எண்ணம் 264

சொல்! செயலால்

நீ அடங்கும் போது.

இவ்வுலகம் உன்னுள்

அடங்கி!

ஒடுங்கி மறைந்து விடும்.

அங்கு ஆனந்தம் மட்டுமே நீ அடைவாய்

அதை விருத்து;

இறை குரு உணர்வோடு நீ பிறரை

அடக்காமல்! நீ உன்னுள் அடங்கு

சொல்லாலும், செயலாலும் உன்னுள் அடங்கு

உன் வாழ்க்கையே, ஓர் சாதனைக் கூடமாக,

ஆக்கிக் கொண்டால், உன் ஆத்ம சக்தியானது

வைப்ரேஷன் உன்னையும் வழி

நடத்திச் செல்லும். உன்னை நம்பியவர்களை!

மட்டும் வழிநடத்தி அரவணைத்துச்

செல்லும். என்பது ஸ்ரீ மஹான்களின் அனுபவம் ஆகும்.

ஓர் உண்மை

உன் போதனையால் பிறரை திருத்த முடியாது.

உன் சாதனை அவசியம் பிறரை திருத்தி விடும்.

இது இந்த ஏழையின் அனுபவமாகும்.



உன் எண்ணம்! சொல்! செயல்! 265

இவைகளால் பிறரை அடக்க எண்ணினால்

இவ்வுலகம் உன்னை

அடக்கி அழித்து! இல்லாமல் செய்துவிடும்.

அங்கு உன் தேகம்! காரியம்! உலகம்! மயம்!
அந்த நாள் தான் உன்னை முடிவிலும் கவனம் தேவை.

மேலும் ஓர் உண்மை!

நான்! என்னுடைய! எனது! நீங்கி

ஓர் நாமரூப மூர்த்தி, ஸ்ரீ பகவானிடம்! முழுமையாக

எல்லாம் நீயே! எல்லாம் உன்னால்! எல்லாம் உனதே!

என, சரணார்ப்பணம்! செய்துவிட்டால் போதும்.

உன் அஹங்கார ஆசைக்க அதிகார, அபிமானம்,

சர்வநாசமாகும். மேலே கூறிய, சரணார்ப்பண

நிலையில், மூன்று வாசகங்களும் சத்தியமானவை.

உனக்கு இருப்பும் இல்லை! உன் இயக்கமும் இல்லை

உன் உடைமை உரிமை! இல்லை.

அங்கு நீ, நித்திய முக்தனாகவே இருப்பாய் இது சத்தியம்.

ஸ்ரீ சாயி!!! பாபா.

எல்லாம் ஒன்றே! அது சிவமே! ...
அது யானே! அதுவே நீ! இது சத்தியம்


அன்பின் குடில்
எல்லாம் நீ!
Abode of Love
You Are Everything!